காத்திருக்கிறது. இதனால் தமிழக மக்களுக்கு வேலையின்மையும், வறுமையும் ஏற்படுவது ஒருபுறம் இருக்க, கொலை, கொள்ளை, வழிப்பறி, செயின் அறுப்பு போன்ற கிரிமினல் குற்றங்களும் அதிகரிக்கும். இவர்கள் ரேஷன் கார்டுகளும் வாங்கி, வாக்குரிமையையும் பெற்று வருகிறார்கள். இதுபோன்ற விஷயங்களை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளாதது வேதனையாக உள்ளது.

இதுபோக 'தானே' புயலினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உருப்படியான திட்டங்கள் ஏதும் இல்லாதது எமக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. அமைச்சர்கள் சிறப்பாகப் பணிபுரிவதற்கும், ஆலோசனை வழங்குவதற்கும் தனி உதவியாளர்களாக அதிகாரிகள் இருக்கிறார்கள். இதுபோல சட்டமன்ற உறுப்பினர்களும் சிறப்பாகப் பணிபுரிய, பட்டதாரியாகவோ அல்லது அரசுத் துறை அல்லது அரசு நிறுவனம் ஏதேனும் ஒன்றில் பணிபுரிகின்ற நபரை, அதுவும் சட்டமன்ற உறுப்பினர் விரும்புகின்ற ஒருவரை, தனி உதவியாளராக நியமிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஜாண் ஜேக்கப், நீங்கள் மிகவும் சீக்கிரமாக உரையை முடித்தீர்கள். மிக்க மகிழ்ச்சி. நன்றி.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (2-2-2012) வியாழக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

6. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து 20-9-2011 ஆம் நாளிட்ட கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜெ1) துறையின் அரசாணை (நிலை) எண் 79-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

[1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. 2010-2011 ஆம் ஆண்டிற்கான அரசு இரப்பர் கழகத்தின் இருபத்தேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

8. 2010-2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் முப்பத்தாறாவது ஆண்டறிக்கையும், ஆண்டுக் கணக்குகளும். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

9. 2010-2011 ஆம் ஆண்டிற்கான சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

10. 2010-2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் முப்பத்தாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619– ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

11. 2010-2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள், காகித நிறுவனத்தின் முப்பத்தொன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

3. அவை உரிமைக் குழுவின் அறிக்கை.

4. 2011-2012 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)

5. 2011-2012 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

6. 2011-2012 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

******